## ஏப்ரல்- 04 - புதன்
### புனித இசிதோர்
**“அவர்கள் கண்கள் திறந்தன. அவர்களும் அவரை அடையாளம் கண்டுகொண்டார்கள்” (லூக்.24:31)**

**முதல் வாசகம் : திருத்தூதர் பணிகள்3 : 1 – 10**

ஒருநாள் இறைவேண்டல் செய்யும் நேரமாகிய பிற்பகல் மூன்று மணிக்குப் பேதுருவும் யோவானும் கோவிலுக்குச் சென்றனர்.அப்பொழுது பிறவியிலேயே கால் ஊனமுற்றிருந்த ஒருவரைச் சிலர் சுமந்துக் கொண்டு வந்தனர். கோவிலுக்குள் செல்பவரிடம் பிச்சைக் கேட்பதற்காக அவரை நாள்தோறும் கோவிலின் ”அழகுவாயில்” என்னுமிடத்தில் வைப்பர்.அவர் கோவிலுக்குள் சென்றுகொண்டிருந்த பேதுருவையும் யோவானையும் கண்டு பிச்சைக் கேட்டார்.பேதுருவும் யோவானும் அவரை உற்றுபபார்த்து, ”எங்களைப் பார்” என்று கூறினர்.அவர், ஏதாவது கிடைக்கும் என்ற எதிர்ப்பார்ப்புடன் அவர்களை ஆவலுடன் நோக்கினார்.பேதுரு அவரிடம், ”வெள்ளியும் பொன்னும் என்னிடமில்லை என்னிடம் உள்ளதை உமக்குக் கொடுக்கிறேன். நாசரேத்து இயேசு கிறிஸ்துவின் பெயரால் எழுந்து நடந்திடும்” என்று கூறி,அவரது வலக்கையைப் பற்றிப் பிடித்துத் தூக்கிவிட்டார்கள். உடனே அவரது காலடிகளும் கணுக்கால்களும் வலுவடைந்தன.அவர் குதித்தெழுந்து நடக்கத் தொடங்கினார் துள்ளி நடந்து, கடவுளைப் போற்றியவாறே அவர்களோடு கோவிலுக்குள் சென்றார்.அவர் நடப்பதையும் கடவுளைப் போற்றுவதையும் மக்களனைவரும் கண்டனர். அவர்கள் எல்லாரும் கோவிலின் அழகு வாயில் அருகே பிச்சைக்கேட்டுக் கொண்டிருந்தவர் இவரே என்று அறிந்து கொண்டனர் நடந்ததைப் பார்த்துத் திகைப்பு மிகுந்தவராய் மெய்ம்மறந்து நின்றனர்.

**பதில்பாடல்:** ஆண்டவரைத் தேடுவோரின் இதயம் அக்களிப்பதாக.

**நற்செய்தி : லூக்கா24 : 13 – 35**

வாரத்தின் முதல் நாள் சீடர்களுள் இருவர் எருசலேமிலிருந்து ஏறத்தாழ பதினொரு கிலோ மீட்டர் தொலையிலுள்ள ஓர் ஊருக்குச் சென்று கொண்டிருந்தனர். அவ்வூரின் பெயர் எம்மாவு.அவர்கள் இந்நிகழ்ச்சிகள் அனைத்தையும் குறித்து ஒருவரோடு ஒருவர் உரையாடிக் கொண்டே சென்றார்கள்.இப்படி அவர்கள் உரையாடிக் கொண்டும் வினவிக்கொண்டும் சென்றபோது, இயேசு நெருங்கி வந்து அவர்களோடு நடந்து சென்றார்.ஆனால் அவர் யார் என்று அறிந்து உணர முடியாதவாறு அவர்கள் கண்கள் மறைக்கப்பட்டிருந்தன.அவர் அவர்களை நோக்கி, ”வழிநெடுகிலும் நீங்கள் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டிருப்பது என்ன?” என்று கேட்டார். அவர்கள் முகவாட்டத்தோடு நின்றார்கள்.அவர்களுள் கிளயோப்பா என்னும் பெயருடைய ஒருவர் அவரிடம் மறுமொழியாக, ”எருசலேமில் தங்கியிருப்பவர்களுள் உமக்குமட்டும்தான் இந்நாள்களில் நிகழ்ந்தவை தெரியாதோ!” என்றார்.அதற்கு அவர் அவர்களிடம், ”என்ன நிகழ்ந்தது?” என்று கேட்டார். அவர்கள் அவரிடம், ”நாசரேத்து இயேசுவைப் பற்றியேதான் பேசுகின்றோம். அவர் கடவுளுக்கும் மக்கள் எல்லாருக்கும் முன்பாகச் சொல்லிலும் செயலிலும் வல்ல இறைவாக்கினராகத் திகழ்ந்தார்.அவர் இஸ்ரயேலை மீட்கப் போகிறார் என்று நாங்கள் எதிர்பார்த்து இருந்தோம். ஆனால் தலைமைக் குருக்களும் ஆட்சியாளர்களும் அவருக்கு மரணதண்டனை விதித்துச் சிலுவையில் அறைந்தார்கள்.இவையெல்லாம் நிகழ்ந்து இன்றோடு மூன்று நாள்கள் ஆகின்றன.ஆனால் இன்று எங்களைச் சேர்ந்த பெண்களுள் சிலர் எங்களை மலைப்புக்குள்ளாக்கினர் அவர்கள் விடியற்காலையில் கல்லறைக்குச் சென்றார்கள்அவருடைய உடலைக் காணாது திரும்பி வந்து, வானதூதர்களைக் கண்டதாகவும் இயேசு உயிரோடியிருக்கிறார் என்று அவர்கள் கூறியதாகவும் சொன்னார்கள்.எங்களோடு இருந்தவர்களுள் சிலரும் கல்லறைக்குச் சென்று, அப்பெண்கள் சொன்னவாறே இருக்கக் கண்டனர். ஆனால் அவர்கள் இயேசுவைக் காணவில்லை” என்றார்கள்.இயேசு அவர்களை நோக்கி, ”அறிவிலிகளே! இறைவாக்கினர்கள் உரைத்த எல்லாவற்றையும் நம்ப இயலாத மந்த உள்ளத்தினரே!மெசியா தாம் மாட்சி அடைவதற்குமுன் இத்துன்பங்களைப் பட வேண்டுமல்லவா!” என்றார்.மேலும் மோசேமுதல் இறைவாக்கினர்வரை அனைவரின் நூல்களிலும் தம்மைக் குறித்து எழுதப்பட்ட யாவற்றையும் அவர் அவர்களுக்கு விளக்கினார்.அவர்கள் தாங்கள் போக வேண்டிய ஊரை நெருங்கி வந்தார்கள். அவரோ அதற்கு அப்பால் போகிறவர் போலக் காட்டிக் கொண்டார்.அவர்கள் அவரிடம், ”எங்களோடு தங்கும் ஏனெனில் மாலை நேரம் ஆயிற்று பொழுதும் போயிற்று” என்று கூறிக் கட்டாயப்படுத்தி அவரை இணங்கவைத்தார்கள். அவர் அங்குத் தங்குமாறு அவர்களோடு சென்றார்.அவர்களோடு அவர் பந்தியில் அமர்ந்திருந்தபோது அப்பத்தை எடுத்து, கடவுளைப் போற்றி, பிட்டு அவர்களுக்குக் கொடுத்தார்.அப்போது அவர்கள் கண்கள் திறந்தன. அவர்களும் அவரை அடையாளம் கண்டுகொண்டார்கள். உடனே அவர் அவர்களிடமிருந்து மறைந்துபோனார்.அப்போது, அவர்கள் ஒருவரையொருவர் நோக்கி, ”வழியிலே அவர் நம்மோடு பேசி, மறைநூலை விளக்கும்போது நம் உள்ளம் பற்றி எரியவில்லையா?” என்று பேசிக் கொண்டார்கள்.அந்நேரமே அவர்கள் புறப்பட்டு எருசலேமுக்குத் திரும்பிப் போனார்கள். அங்கே பதினொருவரும் அவர்களோடு இருந்தவர்களும் குழுமியிருக்கக் கண்டார்கள்.அங்கிருந்தவர்கள், ”ஆண்டவர் உண்மையாகவே உயிருடன் எழுப்பப்பட்டார். அவர் சீமோனுக்குத் தோற்றம் அளித்துள்ளார்” என்று சொன்னார்கள்.அவர்கள் வழியில் நிகழ்ந்தவற்றையும் அவர் அப்பத்தைப் பிட்டுக் கொடுக்கும்போது அவரைக் கண்டுணர்ந்துகொண்டதையும் அங்கிருந்தவர்களுக்கு எடுத்துரைத்தார்கள்.

**தியானம்:** இந்த உலகம் நம்மை பார்க்கின்ற பார்வை வேறு. நம்மை படைத்து உருவாக்கி நடத்தி வருகின்ற தேவன் நம்மை பார்க்கின்ற பார்வை வேறு. பிறவிக்குருடனைப் பார்த்து சீடர்கள் கேட்கின்றார்கள் இவன் இப்படி குருடனாய் பிறப்பதற்கு காரணம் இவன் செய்த குற்றமா இல்லை இவனுடைய பெற்றோர்கள் செய்த குற்றமா? (யோவா.9:2). இதுதான் உலகத்தின் பார்வை. ஒருவன் குறைபாடுகளோடு இந்த உலகத்தில் பிறந்தால் அவன் கடவுளால் சபிக்கப்பட்டவன் என்ற எண்ணத்தோடு உற்றுநோக்குகின்ற உலகம். இயேசு இந்த உலகத்தின் பார்வையைக் கொண்ட சீடர்களுக்கு, இவன் இப்படி பிறப்பதற்குக் காரணம் இவன் செய்த பாவமும் இல்லை இவன் பெற்றோர் செய்த பாவமும் இல்லை. இவன் வழியாக கடவுளின் வல்ல செயல் இந்த உலகத்திற்கு எடுத்துக் காட்டப்படுவதற்காகவே கடவுள் அவனை இவ்வாறு படைத்திருக்கின்றார் என்று பதில் கூறுகின்றார். மேலும் அவனை தேவ வல்லமையால் நிரப்பி குணப்படுத்துகின்றார் (யோவா.9:3-7). அதேபோல்தான் இன்றைய முதல் வாசகத்திலே வாசிக்கின்றோம், பிறவியிலேயே கால் ஊனமுற்றிருந்த மனிதனை சபிக்கப்பட்டவனாக, ஒன்றுக்கும் உதவாதவனாக, குடும்பத்திற்கு சுமையாக உற்றுநோக்கி எந்த தேவன் உன்னை இந்த நிலைக்கு ஆளாக்கினானோ அதே தேவனுடைய ஆலயத்தின் முற்றத்தில் கையேந்தி பிச்சை எடுத்து உனது வாழ்வை நிறைவுசெய்து கொள் என்று அவனை தூக்கி வந்து ஆலயத்திற்கு முன்பாக போட்டார்கள் அவனுடைய உறவினர்கள். ஆனால் கடவுளுடைய பார்வை வேறு. உயிர்ப்பின் அனுபவத்தைப் பெற்ற பேதுருவும், யோவனும் உலகம் புறக்கணித்து ஒதுக்கித் தள்ளிய மனிதனை உற்று நோக்கி, அவனுள் இருக்கின்ற தேவ வல்லமையை அவனுக்கு எடுத்துக் காட்டுகின்றார்கள். உலகத்தில் இருக்கின்ற எந்த சக்தியைவிட உனக்குள் இருக்கும் தேவன் மிகப் பெரியவர் (1யோவா.4:4). அவருடைய ஆற்றலால் எழுந்து நட என்று சொல்லி கடவுளின் மகத்துவத்தை உலகத்திற்கு அறிவிக்கும் மனிதனாக அவனை மாற்றிவிடுகின்றார். இன்றைய நற்செய்தி வாசகத்திலும் உலகத்தின் பார்வையில் தோல்வி என்று சொல்லப்பட்ட சிலுவை மரணத்தையும், இயேசுவின் பாடுகளையும் குறித்து கவலைப்பட்டுக் கொண்டிருந்த எம்மாவுஸ் சீடர்களை கடவுளின் வார்த்தையால், கடவுளின் எண்ணங்களால் அவர்களை நிரப்பி அவர்களுடைய அகக்கண்களை திறந்து உயிர்த்த இயேசுவை கண்டுகொள்ளச் செய்கின்றார். உலகத்தின் பார்வைகள், எண்ணங்கள், விமர்சனங்கள் நமது எண்ணங்களை ஆளவிடாமல் தேவனுடைய எண்ணங்களால் நமது மனதை கட்டிப்போட தெரிந்தவர்களே கடவுளை கண்டுகொள்வார்கள், கடவுளுடைய மகிமையை அனுபவிப்பார்கள். வெளியில் இருக்கும் சூழ்நிலைகளால், மனிதர்களின் விமர்சனங்களால் இயக்கப்படுபவர்களாக இல்லாமல் இறைவார்த்தையினால் நம்மை நிரப்பிக்கொண்டு நமது அகக்கண்களை திறந்து நமக்குள் இருக்கும் உயிர்த்த இயேசுவைக் கண்டு வாழ்வோம்.